மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொடுத்த அடையாள அட்டையுடன் அந்தச் சாலைப் பணியாளர்களே கொடுத்த மனுக்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எஸ்.ஆர்.பி. அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அவர்களாகவே கொடுத்த கடிதங்களாகத் தெரியவில்லை, engineered. சொல்லி ஒரே மாதிரி எழுதி எல்லோரும் கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக இது ஆதாரம் ஆகாது. இது ஆதாரம் என்றால் ஒரு விசாரணைக்கு அவர் தயாராக இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எஸ்.ஆர்.பி. அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. பிரச்சினை முடிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டு அதற்கு நீங்கள் நன்றியும் சொல்லியாகி விட்டது.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, These are all statements given by the aggrieved, then Government employees. They are affected people. They have given the statements. They have enclosed along with their written statements, signed statements, also the identity cards issued by the Government. More than this no more evidence is required to prove that they are all genuine. *(குறுக்கீடுகள்)*

6. கவன ஈர்ப்பு

சீர்காழி, எடமணல் மற்றும் திருநகரி கிராமங்களுக்கிடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சந்திரமோகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சந்திரமோகன். *(குறுக்கீடுகள்)*

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

4. மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி கையூட்டு பெற்றதற்கான ஆதாரங்கள் என மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்தவை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, இந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. திரு. சந்திரமோகன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது statement ஆகாது. It is only on a piece of paper.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இப்போது விவாதம் கிடையாது இது. அவர் ஏற்கெனவே குற்றச்சாட்டிற்கான ஆதாரத்தைக் கேட்டார்கள். ஆதாரத்தைக் கொடுத்து விட்டார். ஆதாரத்தினுடைய நகலை என்னிடத்திலேயும் கொடுத்திருக்கிறார். அது முடிந்துவிட்ட பிரச்சினை. இனிமேல் இதில் விவாதத்திற்கு இடமில்லை. திரு. சந்திரமோகன். (குறுக்கீடுகள்) அடுத்த நிகழ்ச்சிக்கு போயாகிவிட்டது.

6. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

சீர்காழி, எடமணல் மற்றும் திருநகரி கிராமங்களுக்கிடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்—தொடர்ச்சி

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி தொகுதி எடமணல் மற்றும் திருநகரி கிராமங்களுக்கு இடையே வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு) பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

அறிக்கை

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி–திருமுல்லைவாயில் சாலையில் (மாவட்ட முக்கிய சாலை) கி.மீ. 8/6–ல் எடமணல் கிராமம் அமைந்துள்ளது. சீர்காழி வட்டம், மங்கைமடம்–திருநகரி (இதர மாவட்டச் சாலை) சாலையில் கி.மீ.4/4–ல் திருநகரி கிராமம் உள்ளது. இவ்விரு கிராமங்களுக்கும் இடையில் உப்பனாறு குறுக்காகச் செல்கிறது. இவ்விரண்டு கிராமங்களையும் இணைக்க உப்பனாற்றில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவது அவசியமாகும். ஆற்றின் குறுக்கே 10 கண்கள் கொண்ட 8.6 மீ. அகலமுள்ள உயர்மட்ட பாலம் மற்றும் அணுகு சாலைகள் இருபுறமும் அமைக்க ரூபாய் 425 இலட்சம் செலவாகும். இப்பணியினை சுனாமி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்திட உரிய செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, அவர் பேசி முடித்து விடட்டும்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். 4.25 கோடி ரூபாய் செலவிலே புதிய பாலம் அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் சாலை வசதி இல்லாத கிராமங்களே இல்லையென்று நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைமூலம் பல புரட்சிகளைச் செய்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் சீர்காழி தொகுதி, எடமணல் கிராமத்திற்கும், திருநகரி கிராமத்திற்கும் இடையில் உள்ள வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் மேல், ரூபாய் 4.25 கோடி மதிப்பில் போக்குவரத்துப் பாலம் கட்டப்படும் என்று அறிவித்து, பல ஆண்டுகளாக கழுத்தளவு நீரில் ஆற்றைக் கடந்து சென்று கொண்டிருந்த இரண்டு கிராம மக்களின் வயிற்றில் பாலை வார்த்த தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது சீர்காழி தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.